**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 27 January 2021

# கொள்ளைநோய், கல்விமுறை, இனவாதம் தொடர்பில் கல்வி அமைச்சர் லாரன்ஸ் வோங்

*கொள்கை ஆய்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ‘சிங்கப்பூர் கண்ணோட்ட மாநாடு’ நிகழ்வில் இடம்பெற்ற பகிர்வுகள்*

கொவிட்-19 நெருக்கடியிலிருந்து மேலும் நியாயமான, பசுமையான, ஒன்றிணைந்த நாடாக சிங்கப்பூர் மீண்டுவர இக்கொள்ளைநோய்ச் சூழல் மூன்று பெரும் அம்சங்களில் மாற்றியமையும் வாய்ப்பை அளித்துள்ளதாக கல்வி அமைச்சர் லாரன்ஸ் வோங் கூறியுள்ளார்.

கொள்கை ஆய்வுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த ‘சிங்கப்பூர் கண்ணோட்டம்’ மாநாட்டில் ‘மீட்டமைதல்’ என்ற தலைப்பில் அமைச்சர் இவ்வாறு கூறியிருந்தார்.

## மீட்டமைவதற்கான 3 அம்சங்கள்

கொவிட்-19 கொள்ளைநோய் ஒரு முடிவுக்கு வர, நான்கு முதல் ஐந்து ஆண்டுகள் வரை ஆகலாம் என்று குறிப்பிட்ட அமைச்சர், பெரும் மாற்றத்திற்குள்ளாகிய உலகத்தில் வாழ சிங்கப்பூரர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ளவேண்டும் என்றார்.

முதலில், சமத்துவமின்மையை சிங்கப்பூர் சமாளிக்க வேண்டும். கொள்ளைநோயால் பல நாடுகளில் ஏற்றத்தாழ்வு அதிகரித்துள்ளது.

இந்தச் சமத்துவமின்மையைக் குறைக்கவும் தகுதி அடிப்படையிலான ஓர் அமைப்பு முறையை ஏற்படுத்தவும் சிங்கப்பூர் அரசாங்கம் முயன்று வருகிறது.

கொள்ளைநோய் தாக்கியபோது, சிங்கப்பூர் அதன் ஒதுக்கீட்டு நிதியைப் பயன்படுத்தி மக்களின் வேலைகளைக் காத்ததுடன் பெரும் பாதிப்புக்குள்ளானோருக்குத் தேவையான உதவிகளை நல்கியது.

நீடித்த நிலைத்தன்மை என்ற அம்சம் குறித்துப் பேசிய அமைச்சர் வோங், சிங்கப்பூர் ஏற்கெனவே உலகின் ஆகப் பசுமையான நாடுகளில் ஒன்று என்றார்.

வாகன எண்ணிக்கை அதிகரிக்காமல் நிறுத்தி வைத்த ஒரே நாடு சிங்கப்பூர் என்றும் அவர் சுட்டினார். இருப்பினும், திரு வோங், “நம் வளர்ச்சி மேலும் தூய்மையானதாக, நம் எண்ணங்கள் மேலும் பசுமையானதாக அமைவதற்கு மேலும் என்ன செய்யலாம் என்பது குறித்து நாம் ஆலோசிக்க வேண்டும்,” என்றார்.

கொவிட்-19 நெருக்கடியால் பல நாடுகளில் பிரிவினை போக்கு மேலும் மோசமடைந்து வருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர், தகவல்கள் உண்மையாக இருப்பது பற்றியும் பொய்ச் செய்திகளாக இருப்பதும் பற்றியும் எடுத்துரைத்தார்.

தகவல்கள் நுனிவிரலில் இருந்தாலும் பயங்கரவாத சிந்தனை மேலும் வலுவாகச் சிலரது மனதில் வேரூன்றி, அரசாட்சிக்கு நெருக்குதல் அளிக்கிறது. இதனால் சமூகங்கள் தங்களின் ஒருமைப்பாட்டு உணர்வை வலுவாக்கிக்கொள்ளவதே சிறந்த வழி என்றார் அமைச்சர் வோங்.

## அனைவரின் மேம்பாட்டுக்கும் ஏற்ற கல்விமுறை

வாழ்நாளுக்கு ஏற்ற ஒரு கல்விமுறையையே சிங்கப்பூர் விரும்புகிறது. சிறுவயதில் கற்றலைத் திணித்துவிட்டு பெரியவர் ஆனதும் வேலைச் சந்தைக்குச் செல்வதுமாகக் கல்விமுறை இருக்கக் கூடாது என்பதில் நாடு குறியாய் உள்ளது.

நாட்டின் கல்விமுறையில் இத்தகைய அடிப்படைச் சிந்தனை மாற்றம் குறித்துப் பேசிய திரு வோங், ‘ஸ்கில்ஸ்ஃபியூச்சர்’ இயக்கத்தை உதாரணம் காட்டினார்.

இதன்படி புதுத்திறன் பயிற்சி, திறன் மேம்பாடு, போன்றவற்றில் வெவ்வேறு வயதினர் தங்களின் வேறுபடும் தகுதிகளுடன் ஈடுபடுவதை அவர் குறிப்பிட்டார்.

சமூக முன்னேற்றத்தைப் பாதுகாக்க, அரசாங்கம் ஆரம்ப நாட்களிலேயே தலையிடுவதாக அவர் விவரித்தார்.

இதற்காகவே பாலர் பள்ளிக் கல்வியில் சிங்கப்பூர் குறிப்பிடத்தக்க முதலீடுகள் செய்வதாகவும் அனைத்து வருமானக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் தரமான கல்வித் திட்டங்கள் மூலம் பயனடைவதாகவும் அவர் கூறினார்.

படிப்படியான சம்பள உயர்வு முறையை வெவ்வேறு துறைகளில் சிங்கப்பூர் நடைமுறைப்படுத்தி, பல துறைத் தொழிற்கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துக்கான பாதைகளை மறுஆய்வு செய்து வருகிறது. பட்டதாரிகளுக்கு அதிகச் சம்பளத்துடன் மேலும் சிறந்த வேலைகளும் நல்ல வேலை முன்னேற்றமும் அமைய வேண்டும் என்பதில் சிங்கப்பூர் கவனம் செலுத்தி வருகிறது என்றார்.

## இனவாத உணர்வை அரசியல் ஆக்கக்கூடாது

சிங்கப்பூரில் இனவாத உணர்வு உள்ளதா என்று கேட்கப்பட்டபோது அமைச்சர் வோங், ‘ஆமாம்’ என்று உறுதியாகப் பதிலளித்தார். இருப்பினும் நிலைமையை மேம்படுத்துவதில் அரசாங்கம் தொடர்ந்து கடப்பாடு கொண்டுள்ளதாகவும் நாட்டில் அடையாள அரசியல் வேரூன்றாமல் தடுப்பதாகவும் அவர் உறுதிப்படுத்தினார்.

தற்போதைய நிலை, 10 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன் இருந்ததை விட மேம்பட்டுள்ளது என்றாலும் அது ஓர் உன்னத நிலை அன்று. இந்தச் சிறு சிறு குறைபாடுகளை மிதமாக்க முயற்சி செய்வதே அரசாங்கத்தின் இலக்கு என்றார் திரு வோங்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.